# கிழக்கு மாகாண
# கல்வி, பண்பாட்டலுவல்கள், காணி, காணி அபிவிருத்தி, போக்குவரத்து
# அமைச்சின் கௌரவ அமைச்சர் விமலவீர திசாநாயக்க அவர்களின்
# 2013 ஆம் நிதியாண்டிற்கான பாதீட்டுரை

கிழக்கு மாகாணத்தில் உள்ள மாணவர்களுக்கும் மக்களுக்கும் வினைத்திறனும் பயன் உறுதியும் மிக்க சேவைகளை வளங்கும் வகையில் அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களுக்கு வசதிகளையும் வழிகாட்டல்களையும் வழங்குவது எனது அமைச்சின் பிரதான கடப்பாடாகும். இதன் பொருட்டு தேசிய மற்றும் மாகாண சபையின் கொள்கை வழிகாட்டல்களை நிறைவேற்றி வருகின்றன. எமது அமைச்சு பின்வரும் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன.

- கல்வி, கலாச்சார, காணி, போக்குவரத்து துறைகளின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தலும் கண்காணித்தலும்
- இடைக்கால அபிவிருத்தி பெறுபேற்று சட்டகங்களையும் வருடாந்த அமுலாக்க திட்டங்களையும் தயாரித்தலும் வேலை முன்னேற்ற நடவடிக்கைகளை கண்காணித்தலும்.
- பட்டதாரி ஆசிரியர்கள் டிப்ளோமா ஆசிரியர்களுக்கான நியமனங்களை வழங்குதல்
- எமது அமைச்சை சார்ந்த சகல உத்தியோகத்தர்களினதும் (அகில இலங்கை சேவையைச் சார்ந்தவர்களும், இணைந்த சேவையை சார்ந்தவர்களும் தவிர) மாகாணத்திற்குள்ளான உள்ளக இடமாற்றம் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்
- முன்பள்ளிகளை பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்.

## எமது அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்தி செயற்பாடுகள்

### புதிய கல்வி வலயங்களை ஸ்தாபித்தல்

மாணவர்களின் கல்வி நடவடிக்கையினை மேம்படுத்துவத்துவதன் பொருட்டு ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்ட 12 கல்வி வலயங்களக்கு மேலதிகமாக புதிதாக 2007 ம் ஆண்டு மட்டக்களப்பு மத்திய கல்வி வலயமும், 2008ம் ஆண்டு திருக்கோவில், கிண்ணியா, ஆகிய இரு கல்வி வலயங்களும் 2010 ம் ஆண்டு திருகோணமலை வடக்கு, மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயங்களும் ஸ்தாபிக்கப்பட்டு கல்வி நிர்வாக, அபிவிருத்தி நடவடிக்கைகள் கிழக்கு மாகாணத்தில் விஸ்தரிக்கப்பட்டன.

### மூடப்பட்டிருந்த பாடசாலைகளை மீளத் திறத்தல்

கடந்த காலங்களில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக திருகோணமலை மடடக்களப்பு மாவட்டங்களில் பெருளவிலான மக்கள் தனது சொந்த இருப்பிடங்களை விட்டு வெளியேறியதுடன், இப் பிரதேசத்திலுள்ள 69 பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன. இதன் காரணமாக இப் பிரதேச மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பெரிதும் பாதிப்படைந்த நிலையில் காணப்பட்டன. இவ்வாறாக மூடப்பட்டிருந்த பாடசாலைகளில் 2008ம் ஆண்டில்

இருந்து இற்ற வரை 47 பாடசாலைகள் மீளத் திறக்கப்பட்டு, மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் முன்னெடுத்து செல்லப்பட்டன.

### புதிதாக பாடசாலைகளை ஆரம்பித்தல்

கிழக்கு மாகாணத்தில் 2008-2012 ஆண்டு வரை 42 புதிய பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இவற்றுள் 2010 ம் ஆண்டில் 13 பாடசாலைகளும் 2011ம் ஆண்டில் 6 பாடசாலைகளும் 2012ம் ஆண்டில் 03 பாடசாலைகள் மகாஓயா, கிண்ணியா(2) ஆகிய கல்வி வலயங்களில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டன.

### பாடசாலைகளில் புதிய வகுப்புகள் ஆரம்பித்தல்

2008 ம் ஆண்டிற்குப் பின்னர் கிராமப்புற பாடசாலைகளில் கல்வி வாய்ப்பினை விரிவுபடுத்துவதன் பொருட்டு தரம் 5 வரை இருந்த பாடசாலைகளில் தரம் 6 - 9 வரையும், தரம் 8 வரை உள்ள பாடசாலைகளில் தரம் 9-11 வரையும் புதிய வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. மேலும் கிராமப்புற, நகர் எல்லைப் பாடசாலைகளில் க.பொ.த உயர்தர விஞ்ஞான, கலை, வர்த்தக வகுப்புகள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டன. 2008 – 2012 149 பாடசாலைகள் தரமுயர்த்தப்பட்டன.

### ஆசிரியர் நியமனங்கள்

எமது அமைச்சினால் 2008ம் ஆண்டு தொடக்கம் 2012ம் ஆண்டு வரை 4434 ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டன. இதில் 3111 தமிழ் மொழி மூலமான ஆசிரியர்களும், 1323 சிங்கள மொழி மூலமான ஆசிரியர்களும் உள்ளடக்கப்படுகின்றனர். 2012ம் ஆண்டு 869 ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டன.

**ஆசிரியர் நியமனங்கள் தொடர்பான விபரங்கள் 2008 – 2012**

| ஆசிரியர் வகை | தமிழ் மொழி மூலம் | | | | | | சிங்கள மொழி மூலம் | | | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | மொத்தம் | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | மொத்தம் | |
| தேசிய கல்வியற் கல்லூரி ஆசிரியர்கள் | 297 | 253 | 221 | 72 | 197 | 1040 | 198 | 152 | 22 | 8 | 45 | 425 | 1449 |
| உதவி ஆசிரியர்கள் | 294 | – | – | – | – | 294 | 99 | – | – | – | – | 99 | 393 |
| பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் | – | – | 29 | – | – | 29 | – | – | – | – | – | 0 | 29 |
| தேசிய கெடட் கல்லூரி ஆசிரியர்கள் | 61 | – | – | – | – | 61 | 24 | – | – | – | – | 24 | 85 |
| பட்டதாரி ஆசிரியர்கள் | 1109 | – | 116 | 56 | 486 | 1767 | 132 | 51 | 210 | 161 | 221 | 775 | 2478 |
| **மொத்தம்** | **1761** | **253** | **366** | **128** | **683** | **3191** | **453** | **203** | **232** | **169** | **266** | **1323** | **4434** |

### முன்பள்ளிப் பாதுகாப்பு அபிவிருத்தி பிரிவு

கிழக்கு மாகாணத்தில் 1785 முன்பள்ளிப் பாடசாலைகள் எனது அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. இம் முன்பள்ளிப் பாடசாலைகளில் 60,368 முன்பள்ளி சிறார்களும் 3,827 ஆசிரியர்களும் அனுபவரீதியான கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார்கள். முன்பள்ளிப் பாடசாலைகள் தொடர்பான விபரம் வருமாறு:

**முன்பள்ளிப் பாடசாலைகள் தொடர்பான விபரம் - 2012**

| மாவட்டம் | பாடசாலை எண்ணிக்கை | ஆசிரியர் எண்ணிக்கை | முன்பள்ளி சிறார்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| திருகோணமலை | 463 | 953 | 14,505 |
| மட்டக்களப்பு | 568 | 1,264 | 21,663 |
| அம்பாறை | 754 | 1,610 | 24,200 |
| **மொத்தம்** | **1,785** | **3,827** | **60,368** |

இம் முன்பள்ளிச் சிறார்களின் அனுபவரீதியான கற்றல் நடவடிக்கைகள், முன்பள்ளி ஆசிரியர்களின் பயிற்சி, மேற்பார்வை, கண்காணிப்பு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக கல்வி அமைச்சில் முன்பள்ளிப் பிரிவு ஒன்று உதவிக் கல்விப் பணிப்பாளரின் கீழ் செயற்பட்டு வருகின்றது. வலயமட்டத்தில் இந் நடவடிக்கைகள் உதவிக் கல்விப் பணிப்பாளர் / இணைப்பாளர் மூலம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

2008ம் ஆண்டு தொடக்கம் இற்றவரை 180 ஆசிரியர்களுக்கு குறுங்கால வதிவிடப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இவற்றில் 40 ஆசிரியர்கள் 2012 ம் ஆண்டில் பயிற்சியினை பெற்றுக் கொண்டுள்ளார்கள். இந் நடவடிக்கைக்கு மேலாக வருடாவருடம் முன்பள்ளிச் சிறார்களின் கண்காட்சி நிகழ்வுகளும் இடம் பெற்றுள்ளன. 2012 ம் ஆண்டில் அம்பாறை மாவட்டத்தில் டி.எஸ் சேனநாயக்கா மகா வித்தியாலத்தில் டிசெம்பர் 2,3 ம் திகதிகளில் இடம்பெற்றது.

**முன்பள்ளி மாணவர்களின் கண்காட்சி ……**



**முன்பள்ளி மாணவர்களின் கண்காட்சி -2010**
**அக்கரைப்பற்று கல்வி வலயம்**



**முன்பள்ளி மாணவர்களின் கண்காட்சி 2011**
**திருகோணமலை கல்வி வலயம்**

மாகாணசபை உறுப்பினர்களுக்கான நிதி ஒதுக்கீட்டு செயற் திட்டத்தின் கீழ் 95முன்பள்ளி அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. முன் பள்ளி அபிவிருத்திச் செயற்திட்டத்திற்கான நிதி ஒதுகீடு 3.46 மில்லியன்.

2012 ம் ஆண்டில் கிண்ணியா விசன், சொலிடாரிட்டி லீக் மற்றும் பிளான் சிறீலங்கா ஆகிய அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்பள்ளி மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கி முன்பள்ளி சிறார்களின் அபிவிருத்திக்கு உதவி புரிந்துள்ளார்கள்.

### அபிவிருத்தி செயற்திட்டங்கள்

கிழக்கு மாகாணத்தில் 2008ம் ஆண்டிற்கு பின்னர் பெருமளவிலான கல்வி அபிவிருத்தி செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ளன. குறிப்பாக மாணவர்களின் விசேட அபிவிருத்தி செயற்திட்டத்திற்கு (PSDG) மேலதிகமாக, உலக வங்கியின் நிதி மூலகமான கல்வி துறை அபிவிருத்தி செயற்திட்டம் (ESDP) 2006-2011ம் ஆண்டுகளிலும், கல்வி முன்னேற்ற அபிவிருத்தி செயற்றிட்டம் (EEDP) 2009 - 2011ம் ஆண்டுகளிலும் செயற்படுத்தப்பட்டன. ஆசிய அபிவிருத்தி நிதி மூலகமான இரண்டாம் நிலைக் கல்வி நவீன செயற்திட்டமும், நிக்கோட் செயற்திட்டமும், யுனிசெப் நிறுவன செயற்திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ளன. ஏறத்தாழ இந் நிறுவனங்கள் மூலமும் 3,609.7 மில்லியன் ரூபா முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டன. இந் நிதி ஒதுக்கீடுகளின் மூலம் பின்வரும் வேலைத்திட்டங்கள் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களிலுள்ள 17 கல்வி வலயங்களில் உள்ள பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

Rs . In Mn.

| அபிவிருத்தி செயற்திட்டங்கள் | நிதி ஒதுக்கீடுகள் |
|---|---|
| உலக வங்கி நிதி ( World Bank) | 715.9 |
| மாகாண விசேட அபிவிருத்தி நன்கொடை(PSDG) | 520 |
| யுனிசெப்(UNICEF) | 312.8 |
| நிக்கோட் (NECORD) | 1661 |
| ஐரோப்பிய ஒன்றியம் (European Union) | 250 |
| ஐக்கிய இராச்சிய உதவி செயற்றிட்டம் (USAID) | 150 |
| **மொத்தம்** | **3609.7** |

- 114 வகுப்பறைக் கட்டிடங்கள் நிர்மானிக்கப்பட்டன.
- 58 விஞ்ஞான ஆய்வுகூடங்கள், 51 நூலகங்கள், 16 கணனி அறைகள், 04 செயற்பாட்டறை, 08 பலநோக்கு கட்டடம் போன்ற விசேட கட்டடங்கள் நிர்மானிக்கப்பட்டன.
- 60 குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள் ஏற்படுத்தப்பட்டன.

- 09 அதிபர்,ஆசிரியர்களுக்கான விடுதிகள் நிர்மானிக்கப்பட்டன.
- 652 வகுப்பறைகள் ஏனைய வசதிகளான விஞ்ஞான ஆய்வுகூடங்கள், நூலகங்கள், ஆசிரியர் விடுதி போன்ற கட்டட திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.
- 467 கணனிகள் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டன.

## 1000 இடைநிலைக்கல்வி பாடசாலைகள் அபிவிருத்தி செயற்றிட்டம்

மகிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கில் உத்தேசிக்கப்பட்டவாறு சகல வசதிகளையும் கொண்ட 1000 இடைநிலைக்கல்வி பாடசாலைகளையும் அதனை அண்மித்துள்ள பகுதிகளில் 4000 ஆரம்பப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்து நகர மாணவர்கள் பெறும் பயன்பாட்டினை கிராம மட்டடத்திற்கு எடுத்துச் செல்வதாகும். இதன் மூலம் கிராம மட்டத்தில் உள்ள மாணவர்களுக்கு பண்புசார் தரம் மிக்க கல்விக்கான சந்தர்ப்பத்தினை உறுதி செய்வதற்கும் கல்விக்கான சம வாய்ப்பினை விரிவுபடுத்துவதும் இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். இச் செயற்றிட்டத்தின் ஊடாக மானிட வளம் மற்றும் உட் கட்டமைப்பு வசதிகள் இப் பாடசாலையில் ஸ்தாபிக்கப்பட்டு அதி சிறந்த கற்பித்தல் செயற்பாடுகள் முன்னெடுத்து செல்லப்படும்.

கிழக்கு மாகாணத்தில் 103 பாடசாலைகள் மேற்படி செயற்திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதில் 2012 ஆண்டிற்கு 85 பாடசாலைகளும் 2013ம் ஆண்டிற்கு 18 பாடசாலைகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

## பொதுப் பரீட்சை பெறுபேறுகள்

### முகவுரை

அசாதாரண சூழ்நிலைகள் காரணமாக கடந்த கால கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டு இருந்ததுடன் அவற்றின் நேரடித் தாக்கம் பொதுப் பரீட்சைப் பெறுபேறுகளில் பெரும் தாக்கத்தை உண்டு பண்ணியுள்ளது. மேலும் இன்றும் கூட நகரப் பாடசாலைகளைவிட கிராமப் புறப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை குறிப்பாக கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் காணப்படுகின்றது. இது பொதுப் பரீட்சைகளில் பாரிய விளைவினை ஏற்படுத்தக் கூடிய ஒரு காரணியாக உள்ளது.

2008ம் ஆண்டு யுத்த நடவடிக்கைகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, மாகாண சபை நிர்வாகம் கிழக்கு மாகாணத்தில் ஏற்படுத்தப்பட்டு பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள், ஆசிரியர் நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டு கல்வி செயற்பாடுகள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. இதன் காரணமாக பொதுப் பரீட்சை பெறுபேறுகள் படிப்படியாக முன்னேற்றத்தினை எய்தக் கூடியதாக இருந்தது.

### க.பொ.த சாதாரணப் பரீட்சைப் பெறுபேறுகள்

பாடசாலை கல்வி முறையில் முதற் தடை தாண்டும் மைலக்கல்லாகவும், க.பொ.த உயர்தர வகுப்பிற்கு அனுமதியினை பெறுவதற்கான பரீட்சையாக க.பொ.த சாதாரணப்பரீட்சை கருதப்படுகின்றது. இப் பரீட்சை தரம் 10,11ம் பாடவிதானத்தை அடிப்படையாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இப் பரீட்சையானது 6 பிரதான பாடநெறிகளையும் 3 துணை பாடங்களையும் கொண்டதாக காணப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்தில் க.பொ.த உயர்தர வகுப்பிற்கு தகுதி பெறும் மாணவர்களின் வீதமானது 2008ம் ஆண்டில் 48.8% ல் இருந்து 2011ம் ஆண்டு 56.4% வளர்ச்சி கண்டுள்ளது. எனினும் தேசிய மட்டத்துடன் ஒப்பிடுகையில் இதன் வீதமானது 51.5% ல் இருந்து 60.8 % ஆக காணப்படுகின்றது. எவ்வாறாயினும் இம் மாகாணத்தின் வளர்ச்சி நிலையானது எதிர்காலத்தில் தேசிய மட்டத்தினை எய்த கூடியதாக இருக்கும் என எதிர்வு கூறலாம். கிழக்கு மாகாணமானது 2008,2009,2010,2011ம் ஆண்டுகளில் தேசிய ரீதியில் 7ம், 6ம், 5ம், 6ம் நிலையினை வகித்து வந்துள்ளது. இதனை பின்வரும் அட்டவணை தெளிவுபடுத்துகின்றது.

### க.பொ.த சாதாரண தர பரீட்சை 2008 - 2011

| மாகாணம் | 2008 | | 2009 | | 2010 | | 2011 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | **சதவீதம்** | **நிலை** | **சதவீதம்** | **நிலை** | **சதவீதம்** | **நிலை** | **சதவீதம்** | **நிலை** |
| மேல்மாகாணம் | 65.87 | 1 | 57.69 | 1 | 64.87 | 1 | 66.56 | 1 |
| மத்தியமாகாணம் | 53.48 | 6 | 44.88 | 5 | 54.63 | 7 | 57.59 | 5 |
| தென்மாகாணம் | 57.40 | 3 | 49.59 | 3 | 59.31 | 3 | 62.86 | 2 |
| வடமாகாணம் | 53.42 | 5 | 43.36 | 7 | 55.00 | 6 | 54.26 | 9 |
| **கிழக்குமாகாணம்** | **48.84** | **7** | **43.77** | **6** | **57.43** | **5** | **56.38** | **6** |
| வடமேல்மாகாணம் | 59.54 | 2 | 50.68 | 2 | 61.25 | 2 | 62.68 | 3 |
| வடமத்தியமாகாணம் | 48.84 | 7 | 39.36 | 9 | 54.04 | 8 | 56.09 | 7 |
| ஊவாமாகாணம் | 47.54 | 9 | 40.35 | 8 | 51.74 | 9 | 54.45 | 8 |
| சப்பிரகமுவாமாகாணம் | 54.76 | 4 | 46.81 | 4 | 58.15 | 4 | 60.44 | 4 |
| **இலங்கை** | 56.81 | | 48.51 | | 58.79 | | 60.80 | |

கிழக்கு மாகாண மாவட்டங்களில் 2008 - 2011ம் ஆண்டு காலப்பகுதியில் க.பொ.த உயர்தர வகுப்பிற்கு தகுதியான மாணவர்கள் அம்பாறை மாவட்டம் முதல் நிலையிலும் அடுத்தபடியாக மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டம் காணப்படுகின்றது. இதனை பின்வரும் அட்டவணை தெளிவுபடுத்துகின்றது.

### க.பொ.த சாதாரண தர பரீட்சை 2008 - 2011

(%)

| மாவட்டம் | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|
| அம்பாறை | 51.43 | 50.18 | 61.72 | 59.66 |
| மட்டக்களப்பு | 49.48 | 49.36 | 61.06 | 57.96 |
| திருகோணமலை | 43.24 | 40.81 | 53.68 | 48.79 |

கிழக்கு மாகாண கல்வி வலயங்களைப் பொறுத்தவரையில் மட்டக்களப்புமத்தி, கல்முனை ஆகிய கல்வி வலயங்களில் க.பொ.த உயர்தர வகுப்பிற்கு தகுதி பெறும் மாணவர் வீதமானது ஸ்தீரமான வளர்ச்சி நிலையில் காணப்படுகிறது. குறிப்பாக கடந்த 5 ஆண்டுகளில் இவ்விரு கல்வி வலயங்களும் தேசிய சராசரியினை விட அதிகமான நிலையில் காணப்படுகிறது. அதே போன்று 2009ம் ஆண்டில் திருக்கோவில் கல்வி வலயமும் 2010ம் ஆண்டில் திருகோணமலை கல்வி வலயமும் 2011 ம் ஆண்டில் அக்கரைப்பற்று கல்வி வலயமும் சராசரியினை விட அதிகமான நிலையில் காணப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்பிடத்தக்க மற்றுமொரு முக்கியமான விடயம் மட்டக்களப்புமத்தி கல்வி வலயம் 2011ம் ஆண்டு தேசிய ரீதியில் 80.08% இனை பெற்று முதலாவது இடத்தினை வகித்துள்ளது. அதே போன்று 2011ம் ஆண்டில் 50% இற்கு குறைவான மாணவர்கள் க.பொ.த உயர்தர வகுப்பிற்கு தகுதி பெறும் கல்வி வலயங்களாக கிண்ணியா, கல்குடா, மூதூர், மகாஓயா, சம்பாந்துறை காணப்படுகின்றது.

## க.பொ.த உயர்தர பரீட்சைப் பெறுபேறுகள்

கிழக்கு மாகாணத்தில் பல்கலைக்கழகத்திற்கு தகுதி பெறுபவர்கள் வீதமானது 2008 - 2010 ஆண்டு காலப்பகுதியில் 63% இற்கு மேலான நிலையில் காணப்படுகிறது. தேசிய ரீதியுடன் ஒப்பிடுகையில் இவ்வீதமானது உயர் நிலையிலேயே காணப்படுகிறது. அதுமாத்திரமன்றி கிழக்கு மாகாணம் தேசிய ரீதியில் 2008, 2009ம் ஆண்டுகளில் 2வது நிலையிலும் 2010ம் ஆண்டு 5வது நிலையிலும் உள்ளன. 2010ம் ஆண்டில் இம் மாகாணத்தின் நிலை மிக சிறியளவிலான தசம வீதத்தில் பின் நிலையினை எய்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இதனை பின்வரும் அட்டவணை தெளிவுப்படுத்துகின்றது

### க.பொ.த உயர் தர பரீட்சை 2008 - 2011

| மாகாணம் | 2008 | | 2009 | | 2010 | |
|---|---|---|---|---|---|---|
| | **சதவீதம்** | **நிலை** | **சதவீதம்** | **நிலை** | **சதவீதம்** | **நிலை** |
| மேல்மாகாணம் | 59.04 | 9 | 57.91 | 9 | 59.18 | 9 |
| மத்தியமாகாணம் | 61.71 | 6 | 59.51 | 6 | 59.28 | 8 |
| தென்மாகாணம் | 64.23 | 4 | 62.96 | 4 | 63.47 | 4 |
| வடமாகாணம் | 77.16 | 1 | 72.01 | 1 | 66.77 | 1 |
| **கிழக்குமாகாணம்** | **66.44** | **2** | **64.73** | **2** | **63.10** | **5** |
| வடமேல்மாகாணம் | 63.78 | 5 | 62.15 | 5 | 63.48 | 3 |
| வடமத்தியமாகாணம் | 59.35 | 8 | 57.97 | 8 | 60.09 | 7 |
| ஊவாமாகாணம் | 61.18 | 7 | 58.98 | 7 | 60.86 | 6 |
| சப்பிரகமுவாமாகாணம் | 64.90 | 3 | 63.30 | 3 | 63.95 | 2 |
| **இலங்கை** | **62.89** | | **61.21** | | **61.67** | |

**பல்கலைக்கழக அனுமதி**

கிழக்கு மாகாணத்தில் 2006/07 - 2010/11 காலப்பகுதிக்கான பல்கலைக்கழக கல்வி ஆண்டுகளில் 6256 மாணவர்கள் பல்கலைகழகத்தில் அனுமதி பெற்றுள்ளனர். மாவட்ட ரீதியாக பார்க்கும் போது அதிகளவிலான மாணவர்கள் அம்பாறை மாவட்டத்திலும் அதற்கு அடுத்த படியாக மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களிலும் பல்கலைக்கழகத்திற்கு அனுமதியினை பெற்றுள்ளனர். இதனை பின்வரும் அட்டவணை எடுத்து காட்டுகின்றது.

**பல்கலைகழகத்திற்கு அனுமதி பெற்றோர் 2006/07 - 2010/11**

| மாவட்டம் | 2006/07 | 2007/08 | 2008/09 | 2009/10 | 2010/11 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| அம்பாறை | 511 | 550 | 533 | 565 | 609 | **2768** |
| மட்டக்களப்பு | 391 | 416 | 408 | 467 | 456 | **2138** |
| திருகோணமலை | 233 | 251 | 291 | 276 | 299 | **1350** |
| **கிழக்கு மாகாணம்** | **1135** | **1217** | **1232** | **1308** | **1364** | **6256** |

கிழக்கு மாகாணத்தில் துறை ரீதியாக பல்கலைக்கழகத்திற்கு 2009/10, 2010/11 ம் ஆண்டுகளில் அனுமதி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை பின்வரும் அட்டவணை மூலம் எடுத்துக் காட்டப்படுகின்றது.

**துறைகள் ரீதியாக பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்றோர் 2009/10 – 2010/11**

| துறைகள் | 2009/10 | | | 2010/11 | | |
|---|---|---|---|---|---|---|
| | விசேட சித்தி | ஏனையவை | மொத்தம் | விசேட சித்தி | ஏனையவை | மொத்தம் |
| கலை | 327 | 109 | 436 | 358 | 88 | **446** |
| வர்த்தகம் | 36 | 209 | 245 | 33 | 222 | **255** |
| விஞ்ஞானம் | 9 | 228 | 237 | 8 | 227 | **235** |
| வைத்திய | 9 | 58 | 67 | 18 | 58 | **76** |
| மிருக வைத்தியம் | 0 | 5 | 5 | 0 | 5 | **5** |
| பல் வைத்தியம் | 0 | 4 | 4 | 0 | 5 | **5** |
| விவசாயம் | 14 | 51 | 65 | 12 | 50 | **62** |
| பொறியியல் | 8 | 67 | 75 | 7 | 69 | **76** |
| தகவல் தொழில்நுட்பம் | 28 | 54 | 82 | 31 | 57 | **88** |
| ஏனையவை | 30 | 62 | 92 | 30 | 86 | **116** |
| **மொத்தம்** | **461** | **847** | **1308** | **497** | **867** | **1364** |

## 2013ம் ஆண்டில்.....................

கிழக்கு மாகாண சபையின் 2012 ம் நிதி ஆண்டு காலப்பகுதிக்குரிய பாதீட்டில் கல்விப் பண்பாட்டலுவல்கள் காணி, காணி அபிவிருத்தி, போக்குவரத்து அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட மொத்த நிதி 7,049 மில்லியன் ரூபாவினை பின்வரும் அடிப்படையில் செலவிட கிழக்கு மாகாண சபை தீர்மானித்துள்ளது.

| | | |
|---|---|---|
| மீண்டெழும் செலவினங்களுக்காக | 7,049 | மில்லியன் ரூபா |
| மூலதன செலவினங்களுக்காக | 384,5 | மில்லியன் ரூபா |
| **மொத்தம்** | **7,433** | **மில்லியன் ரூபா** |

### 2013 ம் ஆண்டிற்கான அமைச்சின் மற்றும் திணைக்களங்கள் சார்ந்த ஒதுக்கீடுகளும் அபிவிருத்தி திட்டங்களும்

2013ம் ஆண்டிற்கான மூலதன செயற்றிட்டங்களும் நிதி ஒதுக்கீடுகளும் வருமாறு:

(மில்லியன்)

| **நிதி மூலம்** | **பிரமாண அடிப்படையிலான நன்கொடை (CBG)** | **மாகாண விசேட அபிவிருத்தி நன்கொடை (PSDG)** | **உலக வங்கி நிதி (TSEP)** | **மொத்தம்** |
|---|---|---|---|---|
| கல்வி அமைச்சு | 8.5 | _ | _ | 8.5 |
| மாகாண கல்வித் திணைக்களம் | 7.0 | 173.0 | 340.0 | 520.0 |
| பண்பாட்டலுவல்கள் திணைக்களம் | 1.0 | 4.0 | _ | 5.0 |
| காணி, காணி நிர்வாகத்திணைக்களம் | 1.0 | 3.0 | _ | 4.0 |
| வீதி போக்குவரத்து அதிகாரசபை | 1.0 | 22.0 | _ | 23.0 |
| **மொத்தம்** | **18.5** | **202.0** | **340.0** | **560.5** |

அமைச்சிற்கு 2012ம் நிதியாண்டில் மீண்டெழும் செலவினங்களுக்காக 66.165 மில்லியன் ரூபாவும், மூலதன செயற்றிட்ட நோக்கங்களுக்காக பிரமாண அடிப்படையிலான மூலதன மானியக் கொடை மூலம் (CBG) 10.5 மில்லியன் ரூபாவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந் நிதியை பயன்படுத்தி 3 மில்லியன் ரூபா நிறுவன அபிவிருத்திகாககவும் 2.5 மில்லியன் ரூபா உத்தியோகத்தர்களுக்கான விடுதித் திருத்த வேலைகளுக்கும் மிகுதி 5 மில்லியன் ரூபா அமைச்சரின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காகவும் செலவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

## ஆசிரியர் வெற்றிடங்களும் நியமனங்களும்

கிழக்கு மாகாணத்தில் வருடா வருடம் 2% - 2.5% வீதமான ஆசிரியர்கள் ஓய்வு பெற்றுச் செல்கின்றார்கள் 2008 – 2012 ம் ஆண்டு காலப்பகுதிகளில் சராசரியாக 350-400 ஆசிரியர்கள் ஓய்வு பெற்று செல்கின்றார்கள். அத்துடன் ஏனைய மாகாணங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் ஆசிரியர்கள் எண்ணிக்கை சராசரியாக 40 – 60 ஆகக் காணப்படுகின்றது. இதனடிப்படையில் பார்க்கும் பொழுது வருட சராசரியாக 428 ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இப் புள்ளிவிபரத்தின் அடிப்படையில் ஆண்டுதோறும் அண்ணளவாக 450 புதிய ஆசிரியர்கள் நியமனம் செய்ய வேண்டியுள்ளது.

தற்பொழுது கிழக்கு மாகாணத்தில் மொத்தமாக **963** ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் தமிழ் மொழி மூலமான ஆசிரியர் வெற்றிடங்கள் **835** உம் சிங்கள மொழி மூலமான ஆசிரியர் வெற்றிடங்கள் **128** உம் உள்ளடங்குகின்றன.

இவ் வெற்றிடங்கள் ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணித பாடங்களில் காணப்படுகின்றன. இவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, 2013 ம் ஆண்டில் இந் நியமனங்கள் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## அதி கஷ்டப் பிரதேச, கஷ்டப் பிரதேசப் பாடசாலை ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு

இதுவரை காலமும் அதிகஷ்டப் பிரதேச, கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கான மாதாந்த விசேட கொடுப்பனவு எமது அமைச்சினால் வழங்கப்பட்டு வந்துள்ளன. இவ்விசேட கொடுப்பனவு பாடசாலையின் அமைவிடத்தினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டன. பாடசாலைகளை அடிப்படையாக கொண்டு வழங்கப்பட்ட முறைமையில் பல்வேறு குறைபாடுகள் காணப்பட்டமையினால் எதிர்காலத்தில் ஆசிரியர்கள் பாடசாலைக்கு பிரயாணம் செய்யும் தூரத்தினை அடிப்படையாக வைத்து விசேட கொடுப்பனவினை கிழக்கு மாகாண சபையின் அங்கீகாரத்துடன் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் (SLEAS) வெற்றிடம்

கிழக்கு மாகாணத்தில் அமைச்சு, மாகாண கல்வித்திணைக்களம், வலயக்கல்வி அலுவலகங்கள், பிரதேச கல்வி வலயங்களுக்கென அனுமதிக்கப்பட்ட இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கான ஆளணி 291 ஆகும். தற்பொழுது கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 77 ஆகும் இதனடிப்படையில் பார்க்கும் பொழுது வெற்றிடம் 114 ஆகக் காணப்படுகிறது.

இவ்வாறான பாரிய வெற்றிடங்கள் கல்வி நிர்வாக அபிவிருத்தி நடவடிக்கையினை முன்னெடுத்துச் செல்வதில் பாரியதொரு இடைவெளியினை ஏற்படுத்தி வருகின்றது என்பதனை இச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கௌரவ முதலமைச்சர் அவர்களே, கௌரவ அமைச்சர்களே, கௌரவ உறுப்பினர்களே இதுவரை எமது அமைச்சினால் 2013 ம் நிதியாண்டில் நிறைவேற்றப்படவுள்ள வேலைத்திட்டங்களை இச் சபைக்கு முன்மொழிந்துள்ளேன்.

தற்போது சமா்ப்பிக்கப்பட்டுள்ள் 2013ம் நிதி ஆண்டிற்கான இம் முன்மொழிவுகளின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்துவதற்கும், நிதி ரீதியாகவும், ஏனைய வழிகளிலும் அனைத்து தரப்பினரதும் உதவியினையும் ஒத்தாசையினையும் எதிா்பாா்க்கின்றேன்.